[1974 மார்ச் 14

[முற்பகல் - 9-30]

Marina Beach

* 420 *Q.*—Thiru A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state —

(*a*) whether there is any proposal under the consideration of the Government to further beautify the Marina Beach ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) (1) மெரினாவில் அண்ணா சதுக்கத்திற்கு அருகில் சிறுவர் பூங்கா ஒன்றைக் கட்டும் செயற் குறிப்பு தமிழ் நாடு சிறப்பு நலநிதியில் வேண்டிய நிதி வசதி இல்லாத காரணத்தால் நடப்பாண்டில் எடுத்துக் கொள்ளப்பட முடியவில்லை.

(2) மெரினாவில் அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து காந்திஜி சிலைவரையிலான முதல் நிலைப்பணி முடிந்த பிறகே, காந்திஜி சிலையிலிருந்து நேப்பியர் பாலம் வரை இயற்கைக் காட்சி வனப்புடைய தோட்டங்களின் சீரமைப்புப் பணியும் (ஐந்து கட்டங்களில்) ஒப்பளிப்புக்காக எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, சென்னை துறைமுக வேலை துவங்கிய நாளிலிருந்து இராயபுரம் பீச் காணாமல் போய்விட்டது, ஹைகோர்ட் பீச்சும் காணாமல் போய்விட்டது, மீண்டும் துறைமுகத்தை விரிவுபடுத்துகின்ற வேகத்தைப் பார்த்தால் மெரினா கடற்கரையும் பாதிக் கப்படுமோ என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நமது அரசு மத்திய அரசோடு தொடர்புகொண்டு அந்தப் பணிகளை கடற்கரையிலே செய்யவும், மெரினா கடற்கரையை அப்படியே வைத்திருக்கவும் வற்புறுத்துமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மெரினா கடற்கரைக்கு ஆபத்து வராதபடி அரசு பார்த்துக்கொள்ளும். அப்படி ஒன்றும் ஆபத்து வந்த தாக நான் கருதவில்லை.

திரு. எ. சி. நரசிம்மன் : தலைவர் அவர்களே, மெரினா கடற்கரை யில் பூந்தோட்டங்கள் எல்லாம் நிறைய இருக்கின்றன. ஆனால், மணற் பாங்கான இடங்களில் பலபேர் இரவிலே காகிதங்கள் மற்றும் குப்பைகள் எல்லாம் போடுகிறார்கள். சிலபேர் அசுத்தமும் செய்கிறார்கள். அந்தக் காகிதங்களை எல்லாம் அப்புறப்படுத்தி, அசுத்தம் இல்லாமல் பார்த்துக் கொண்டால், மெரினா கடற்கரை பார்ப்பதற்கு இரம்மியமாக இருக்கும். சிலபேர் வேறு விதமான அசுத்தங்களும் செய்கிறார்கள். நாம் மேடாக இருக்கிறதே என்று உட்காரப்போனால் அசுத்தங்கள் இருக்கின்றன. ஆகவே, அதைப் போக்க, நிறைய யூரினல்களையும், லெட்ரின்களையும்

1974 மார்ச் 14]

அங்கு அமைத்துக்கொடுத்தால், அந்த இடங்களை அவர்கள் பயன்படுத்து வார்கள்: கடற்கரை பார்ப்பதற்கும் சுத்தமாக இருக்கும். அங்கு அதிக மாக பூந்தோட்டங்கள் தேவையில்லை. இந்த அசுத்தங்கள் இல்லாம லிருக்க வேண்டும். அதைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அந்தப் பூந்தோட்டங்களினுல் பலருக்குப் பல விதமான வசதிகள் கிடைக்கின்றன. அதைக் கெடுக்க நாம் விரும்பவில்லை.

அசுத்தம் இருப்பதாக சொல்கிறுர்கள். அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இரவு நேரங்களில் காகிதங்கள் போடுகிருர்கள் என்று சொன்னுர்கள். என்ன என்ன காகிதங்கள் எப்பேர்ப்பட்ட காகிதங்கள் என்று எனக்குத் தெரியாது. அவற்றை எல்லாம் எடுத்து சுத்தம் செய்ய காலை நேரங்களில் அப்பணிகளைச் செய்ய ஆட்கள் இருக்கிருர்கள்.

திரு. வ. சுப்பிரமணியம் : பூந்தோட்டங்கள் வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. அதற்காக வேறு இடங்கள் இருக்கின்றன. பொது மக்கள் எதற்காகக் கடற்கரைக்கு வருகிருர்களோ, அந்த நோக்கம் நிறை வேறும் வகையில், அதைச் சுத்தமாக, துப்புரவாக வைத்துக் கொள் வதையே முக்கியமான பணியாக அரசு எடுத்துக்கொண்டு செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்களை அங்குப் போகவேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்ருல், அதற்குப் பெயரே ''லவர்ஸ் பார்க்''.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, மெரிஞ கடற்கரையில் ஒரு ''ரிவால்விங் ஹோட்டல்'', சுழலும் ஓட்டல், கட்டப்படும் என்று கூறப் பட்டதே, அது கட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இப்பொழுது அந்த யோசனை இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, உலகத்திலேயே இரண் டாவது அழகான கடற்கரையை நாம் பெற்றிருக்கிறேம். இப்பொழுது வண்ண வண்ண விளக்குகளைக் கண்ணைக் கவரும் வகையிலே போட் டிருக்கிறேம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல், இந்தப் பக்கத்திலே படக்குக் குழாம் வரையிலே, ஹார்பர் இருக்கிறது. இடை யிலே ஒரு ஓட்டல் இருக்கிறது. அந்தப் பக்கம் ஆல் இந்தியா ரேடியோ வுக்கு முன்னுல் குடிசை மாற்றுவாரியம்தான் இருக்கிறது. இருப்பதோ கொஞ்சம் இடம்தான். அந்த இடமும் குறையாத வகையிலே, நமது கடற்கரைக்கு இன்னும் சிறப்பு வரக்கூடிய வகையிலே, நம்முடைய அரசாங்கம் கடற்கரையைப் பாதுகாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இருக்கிற இடத்தில் கட்டிடம் வராதவகையில் அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் படும்.

விளக்குகளைப் பற்றி தெரிவித்தார்கள். அந்த விளக்குகளை எல்லாம் எடுத்துவிட்டு, அரசுச் செலவிலேயே, கார்ப்பரேஷனுக்கு, வேறு விளக்குகளை, "கட் ஆப்" விளக்குகளை, அண்ணசாலையில் போடப்பட்டிருப் பதைப்போல், 200 விளக்குகளைப் போட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த வேலை விரைவில் தொடங்கும். அப்படி கடற்கரையை அழகு படுத்துவதில் அரசு கவனம் செலுத்தும்.

உலகிலேயே அழகான இரண்டாவது கடற்கரை என்று சொன்னார்கள். நான் உலகத்தைப் போய் பார்க்கவில்லை. பார்த்த பிறகு அங்கத்தினருக்குத் தெரிவிக்கிறேன்.

திரு. ஏ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, நமது மெரினா கடற் கரையிலே, பம்பாய் கடற்கரையிலே இருப்பதைப் போல் சிறந்த அக்வேரியம் அமைத்து, அங்கு வருகின்றவர்களுக்கு ஒரு கண்காட்சி அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இப்பொழுதே அக்வேரியம் இருக்கிறது. வேண்டுமென்றால், அது சிறப்பாக அமைவதற்கு மீன் இலாகா நடவடிக்கை எடுக்கவேண்டும். மீன் இலாகா அமைச்சரைக் கேள்வி கேட்டால் பதில் அளிப்பார்கள்.

Salem Steel Plant

* 421 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state —

(*a*) whether the Government of Tamil Nadu have written to the Centre in recent times not to cut the financial allocation already made for the Salem Steel Plant and to ensure its execution without delay; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) & (இ) : சேலம் உருக்காலைக்கென 1974–75 நிதி ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 15 கோடியிலிருந்து ரூ.3 கோடியாகக் குறைக்கப்பட்டிருப்பதை மறுபடியும் கொடுக்க வேண்டுமென்று முதலமைச் சர் இந்தியப் பிரதமருக்கு அனுப்பியுள்ள தந்தியில் கேட்டுக்கொண் டிருக்கிறார்.